சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **82/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | சுந்தர் |
| தந்தை பெயர் | : | முத்துசாமி |
| கிராமம் | : | ஏத்தக்குடி |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | பெயிண்டர் |
| வயது | : | 35 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

6 ம் எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது பெயிண்டராக வேலை பார்த்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பு சேர்ந்தவன் ஆவேன். அ.சா.1 மோகனை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 31.12.2016 ம் தேதி இரவு 01.01.2017 ம் தேதி அதிகாலையில் புதுவருடம்

பிறந்தது தொடர்பாக புத்தாண்டு வாழ்த்துக்கள் என சாலையில் நாங்கள் எழுதிக்கொண்டிருந்தோம். அப்பொழுது இரவு நேரத்தில் கூட்டமாக வந்த நபர்கள் சத்தம் போட்டு எங்களை எழுதக்கூடாது என சொன்னார்கள். வந்தவர்களுக்கும், எங்களுக்கம் வாக்குவாதம் ஏற்பட்டது. அதில் ஒருவர் அ.சா.1 மோகனை அடித்து விட்டார். யார் அடித்தார் என எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

சம்பவத்தினத்தன்று இரவு 12.45 மணிக்கு எதிரிகள்தான் அ.சா.1 ஐ அடித்தார்கள் என்றும், மேலும் ஜாதியின் பெயரை சொல்லி திட்டினார்கள் என்றும், இது தொடர்பாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணையில் சம்பவம் நடந்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்ட காரணத்தால் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.04 16:39:07 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.